www.tamilarangam.net

# அமைதிப்படையுடன் யுத்தம்: இந்திய இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்தா?

வி.சுந்தரலிங்கம்

இந்தியாவும் இலங்கையும் 1987 ஆம் ஆண்டு செய்து கொண்ட ஒப்பந்தத்தை தாங்கள் எதிர்த்து வந்ததாக புலிகள் கூறிய போதிலும் சர்வதேச பிரதிநிதிகளிடம் அவ்வாறு தாம் எதிர்க்கவில்லை எனவும் ஒப்பந்தத்தை அமுல் நடத்த ஒத்துழைப்பு நல்குவதாக புலிகள் கூறியிருக்கின்றனர்.

1988 பெப்ரவரி 24ம் திகதி புலிகளின் தலைவர் பிரபாகரனின் ஒப்பந்தத்துடன் ஐ.நா.சபை பிரதிநிதிகளிடையே வழங்கப்பட்ட பிரசுரத்தில் மேற்படி த்கவல் கூறப்பட்டுள்ளது.

புலிகளின் இந்தியாவின் அமைதிப்படையுடன் 87 அக்டோபரில் போர் தொடங்கினர். ஆனால் பெப்ரவரி மாதம் அவர்கள் அவர்களுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த அலைந்தமை நன்கு புலப்பட்டுள்ளது. ஆயினும் இந்திய அரசு புலிகளை அறவே பலமற்றதாக்கும் நடவடிக்கையில் இறங்கியதால் புலிகள் தமிழரின் எதிரிகளான பிரேமதாசா கும்பலின் காலில் விழுந்து தங்களைக் காப்பாற்றும்படி கோரிக்கை விடுத்தனர். இந்த சந்தர்ப்பத்துக்கு காத்திருந்த பிரேமதாசாவும் புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கியதுடன் ஹில்டன் ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று குலாவினார்.

தமிழ் ஈழம் பெறவே ஆயுதம் தாங்கியதாகவும் சயனைட் குப்பிகளுடன் அலைவதாகவும் புலிகளும் அவர்களது வெளிநாட்டு ஊதுகுழல்களும் ஈழத்துக்கே உலை வைத்த இந்திய ஒப்பந்த்த்தை அமுல் நடத்த ஒத்துழைப்பு நல்குவதாக புலிகளின் தலைமை அறிவித்துள்ளதை அறிவார்களா?

மொத்தத்தில் இவர்களுக்கு ஈழமோ, தமிழ் மக்களின் நலனோ முக்கிய நோக்கமல்ல. உண்மையில் அப்படி இருக்கும் நோக்கத்தில் தான் தாங்கள் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை அமுல் செய்ய ஆதரவு செய்ய தயாராய் இருந்தார்கள் என்றால் இந்த ஒப்பந்தத்தை ஆதரித்த மற்ற தமிழ் குழுக்களுடன் ஏதாவது சேர்ந்து போராட்டம் நடத்தியிருக்க வேண்டும்.

ஆனால் ஒப்பந்தத்தை எதிர்த்து பிரேமதாசாவிடம் சரண் புகுந்தது தங்கள் பதவிகளை தக்க வைத்துக் கொள்ளத்தான் என்பதே உண்மை. ஒப்பந்தத்தை அமுல் நடத்த ஒத்துழைப்பு நல்குவதாக இந்தியாவிடம் கெஞ்சி மன்றாடி தமக்கு முடிசூட்டும்படி எதிர்பார்த்தனர். ஆனால் உதை தான் கிடைத்து. (புதுடில்லி கொடி உறைப்பு என்பதன் காரணம் புரிகிறது) எனவே சிங்கள அரசிடம் சரணாகதி அடைந்தது மாத்திரம் அன்றி இந்த துரோகச் செயலை ராஜதந்திர நகர்வு என்று வெட்கம் கெட்ட தனமாக பிரசாரம் வேறு செய்தார்கள்.

இன்று இவர்களது இதே ராஜதந்திர நகர்வைத் தான் மற்ற இயக்கங்களும் செய்துள்ளன என்பதை புலிகள் உணர்ந்து கொள்வார்களா?

இன்று அந்த கோஷ்டிகளை துரோகிகள் என்றும் கைக்கூலிகள் என்றும் வளர்ப்பு பிராணிகள் என்றும் குற்றம் சாட்டும் அருகதை புலிகளுக்கு உண்டா? இவர்களின் வெட்கக் கேடான நடவடிக்கைகளுக்கு தங்க முலாம் பூசி பளபளக்க வைப்பதில் தமிழ் மக்களுக்கு எதுவித சுகமும் கிடையாது.

இந்தியாவும் வெளியேறினால் தமிழ் மக்களை சிங்கள இராணுவம் கொன்று குவிக்கும் என்று கூறப்பட்ட போது புலிகள் தாங்கள் அப்படி நடக்க விடமாட்டோம் என்று மார் தட்டினார்கள். இந்திய இராணுவம் இருந்த போது மக்கள் இப்படி அனாதரவாக நாட்டை விட்டு ஓடியதில்லை. இன்று நாட்டை விட்டு ஓடும் பொதுமக்களை துரோகிகள் என்றும் ஈழம் கிடைப்பதென்றால் ஒரு லட்சம் பேராவது இறக்க வேண்டும் என்றும் பொறுப்பற்ற தனமாக பேசுவதும் எழுதுவதும் புலிகளுக்கு வாடிக்கையாகி விட்டது.

வெளிநாட்டில் உள்ள புலிகளின் எடுபிடிகள் உண்டியல்களின் மூலம் சில்லறை சேர்த்து சொத்து சேர்க்கவே மக்களின் அழிவையும் புலிகளின் கொலைகளையும் எழுத்திலும் பேச்சிலும் பிரசாரம் செய்கிறார்கள். இந்த பொறுப்பற்ற கும்பல்கள் தமது சுற்றம் சூழ வெளிநாடுகளில் வாசம் செய்யும் கரகாட்டக்காரர்கள்.

இவர்கள் நாட்டின் உண்மை நிலை பற்றியோ அரசியல் பற்றியோ வெளிநாட்டு தமிழ் மக்களுக்கு எதுவித உபயோகமான தகவல்களும் கொடுக்க போவதில்லை.

வெளிநாட்டுப் பணத்திலும் கடனிலும் ஊசலாடும் இலங்கை அரசுக்கு மேற்கு நாடுகள் அள்ளிக் கொடுக்கவே செய்யும். சமீபத்தில் நடைபெற்ற பாரிஸ் மாநாட்டில் இலங்கைக்கான கடன்களுக்கு கடன் வழங்கும் நாடுகள் அங்கீகாரம் அளித்துள்ளன. இதன் மூலம் அங்கு நடைபெறும் அரசின் ஆயுதப் போருக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே தமிழர்களின் கொலை என்று புலிகள் பிரசாரம் செய்ய முயன்றது காற்றில் பறந்து விட்டது. இவர்களின் வழமையான ராஜதந்திர நகர்வுக்கு நடந்தது என்ன?

புலிகளோ அவர்களது வெளிநாட்டு ஓதுவார் கும்பல்களோ மேற்கு நாடுகளின் இந்த போக்கை கண்டிக்க மாட்டார்கள். புலிகளின் அராஜகப் போக்குகளை வெளிநாடுகள் கண்டித்து வருவது தெரிந்ததே. மேற்கு நாடுகளில் வசிக்கும் புலி ஆதரவாளர்கள் நாடு திரும்பவோ, இயக்கத்தில் சேர்ந்து வீரமரணம் அடையவோ தயாரில்லை. எனவே இனிமேல் வெளிநாட்டு நிதி உதவிகளை இலங்கை அரசு திருட்டுத்தனமாக யுத்தத்துக்கு உபயோகிக்கிறது என்று மட்டுமே அலறுவார்கள். இதில் யாருக்கு என்ன பிரயோசனம் இருக்கிறது?

(1)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனவே வெளிநாட்டு தமிழர்கள் சில விடயங்களை உணர்ந்து கொள்வது நல்லது.

1. வெளிநாடுகள் பிரேமதாசாவையும் அவரது அரசையும் கைவிட்டுப் போவதில்லை.

2. புலிகளும் ஈழத்தை எடுத்து தமிழ் மக்களுக்கு கொடுக்கப் போவதில்லை.

3. புலிகள் இலங்கை அரசிடம் மீண்டும் ஒரு சரணாகதி அடைந்து பேச்சுவார்த்தை நடத்தவே செய்வார்கள். அதன் பின்னர் புலிகளும் அரசும் அமைதியடையக் கூடும். ஆனால் தமிழ் மக்களின் துன்பம் வழமை போல் தொடரும்.

அதுவரை தமிழ் மக்களும் அவர்களது உடைமைகளும் அழிக்கப்பட்டே வரும். அநியாயமாக மக்கள் உயிர்களை இழப்பார்கள். எந்த சக்திகளும் இந்த அழிவை நிறுத்தப் போவதில்லை. மொசாட்டிடம் பயிற்சி பெற்ற புலிகள் மக்களிடம் கொள்ளையடித்து ஆயுதம் வாங்கி அட்டகாசம் செய்வார்களே ஒழிய தமிழ் மக்களை கொழும்பும் பிரேமதாசாவின் ராணுவமுமே தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பார்கள்.

கொழும்பு பொருளாதாரம் சீரடைவதைப் பொறுத்தே புலிகளின் பொருளாதாரமும் சீரடையும். இதுவரை காலமும் இது நாம் கண்ட அனுபவத்தின் முடிவு. எனவே சிறிது காலம் அமைதி, சிறிது காலம்போர் என்ற நிலை தொடரும். இறுதியாய் தமிழரிடையே போராட எவரும் இல்லை என்ற நிலை தோன்றியவுடன் (மற்ற இயக்கங்களை புலிகள் அழித்ததால் அந்நிலை விரைவில் வரும்) பிரேமதாசாவின் ஆட்சி மீண்டும் தீவெங்கும் பிரகடனம் செய்யப்படும்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்
## Liberation Tigers of Tamil Eelam

To: Members and Observers
United Nations Commission on Human Rights
Forty-fourth session
From: The Liberation Tigers of Tamil Eelam
24 February 1988

Dear Delegates:

On this date we have transmitted our notice of acceptance of the Geneva Conventions I-IV of 1949 and the Protocols Additional I and II to the Geneva Conventions to United Nations Headquarters and to the International Committee of the Red Cross.

On this same date, we also announce a new appeal by us to the Honorable Shri Rajiv Gandhi, the Prime Minister of India, for a cessation of hostilities and the initiation of peace negotiations. We repeat our pledge to the Government of India that we will co-operate with it to implement the Indo-Sri Lankan Accord to protect the honor, interests and safety of the Tamil people.

We appeal to the distinguished Members and Observers of the Forty-fourth session of the United Nations Commission on Human Rights to prevail upon the Government of India to declare cease-fire and initiate peace negotiations to resolve the following issues:

1. Handing over of arms;
2. The fulfillment of the basic aspirations of the Tamil people.

We also appeal to you to assist us and the Government of India to alleviate the profound suffering of the Tamil people.

Yours truly,

வே. பிரபாகரன்.

Velupillai Prabhakaran
Leader, Liberation Tigers of Tamil Eelam

ஐ.நா.மனித உரிமைக் குழுவின் 44 அமர்வின் உறுப்பினர்களுக்கும், பார்வையாளர்களுக்கும்,
புலிகளிடமிருந்து
24 மாசி 1988

அன்பான பிரதிநிதிகளே,

ஐ.நா தலைமையகத்துக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கும் நாங்கள் ஜெனிவா உடன்படிக்கையின் 49 ம் ஆண்டின் 1 4 வரையான உடன்படிக்கைகளையும் மேலதிக சேர்க்கைகளான 1,2 என்பவற்றையும் ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கிறோம்.

இதே நாளில், யுத்த நிறுத்தம் செய்யவும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவும் இந்திய பிரதமரான ராஜீவ் காந்திக்கு புதிய வேண்டுகோள் ஒன்றை விடுக்கிறோம். தமிழ் மக்களின் கௌரவம், பாதுகாப்பு, நலன்கள் என்பவற்றைப் பாதுகாப்பதற்காக இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அமுல்படுத்த இந்திய அரசுடன் ஒத்துழைப்பதாக உறுதியளிக்கிறோம்.

இம்மாநாட்டின் உறுப்பினர்கள், பின்வரும் விடயங்களில் தீர்வு காண யுத்த நிறுத்தம் செய்யவும் பேச்சுவார்த்தைகளையும் ஆரம்பிக்க இந்தியாவை வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

1. ஆயுத ஒப்படைப்பு
2. தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளை நிறைவேற்றல்

எங்களுக்கும் இந்திய அரசுக்கும் தமிழ் மக்களின் துயரங்களை குறைக்க உதவி செய்யும்படியும் வேண்டுகோள் விடுக்கிறோம்.

உங்கள் உண்மையுள்ள
வே.பிரபாகரன்

தலைவர், தமிழீழ விடுதலைப் புலிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உதவுவோர் இப்படி உதவலாமே

தமிழரின் விடிவுக்கு, தமிழ் ஈழத்துக்கு, மன்னிக்கவும், சுய நிர்ணய உரிமைக்கு, மன்னிக்கவும், சுயநல பதவி வெறிக்கு இன்று திசை திருப்பப்பட்டுள்ள நம் மக்களின் விடுதலைப் போராட்டம் இன்று எம் மக்கள் இருக்கும் மனநிலையில் அவசியம் தானு? எமது வளர்ப்பு பிராணிகளாக இயகக்கங்களின் பிரதிநிதிகள் எனக் கூறிக் கொண்டு பணம் சேர்க்கும் பேர்வழிகளிடம் ஏமாந்து போக வேண்டாம். நீங்கள் கொடுக்கும் பணம் எந்தளவுக்கு சரியான நோக்கத்துக்கு பயன்படுகிறது என்பது கேள்விக்குரியது. நீங்கள் கொடுக்கும் பணத்தில் ஒருபகுதி கார் மாதாந்த தவணைப்பணம், காப்புறுதி, சீட்டுக்காசு கட்டி முடிந்து மிகுதி மிகுதி நம்ம இயக்கங்களுக்கு அனுப்பப்படுகிறது. அங்கு என்ன நடக்கிறது? சந்திக்கு சந்தி யாழ்ப்பாணத்தில் இருக்கும் சைனீஸ் கடைகளில் சாப்பாடு, இரவில் கொத்து ரொட்டி சாப்பிடவும் கொள்ளையடித்த கார் மோட்டார் சைக்கிளில் விலாச ஓட்டங்களுக்கும் உடன்பிறப்புகளின் வெளி நாட்டுப் பயணங்களுக்கும் அன்புக்குரியவரின் வீடுகளுக்கு போகும் போது சொக்கா வாங்கிக் கொண்டு போகவும் ஒரு பகுதி போய் சேருகிறது. இன்னொரு பகுதி "தமிழ் மக்கள்" "நலன் விரும்பிகள்" "மாணவர்கள்" "ஜனநாயக வாதிகள்" என்ற பெயரில் துண்டுப்பிரசுரம் வெளியிடவும், வாய் பேசும் சிறுவர்கள் பட்டினி கிடக்கும் போது வாய் பேசாத சிலைகளை திறக்கவும் பயன்படுகிறது. இதிலும் மிஞ்சுவது முடிவே இல்லாத போராடடத்துக்கு பயன் படுகிறது.

இன்று மக்களுக்கு தேவையானது நிம்மதியான வாழ்வு, இருப்பிட வசதி, பட்டினியில் இருந்து விடுபடுதல், ஏனைய அடிப்படை தேவைகளை நிவர்த்தி செய்தல். எனவே உதவி செய்ய வேண்டும் என விரும்புவர்கள் தமது சொந்த ஊரில் கஷ்டப்படும் தமது அயலவர் அல்லது ஏழைக் குடும்பம் ஒன்றைத் தெரிவு செய்து ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தடவை கொஞ்ச பணத்தை அனுப்பினுல் அந்தப் பணம் சரியான நோக்கத்துக்கு பயன்படும். அதே நேரம் இரத்தத்தை பிழிந்து இங்கு நாம் நாய் போல் உழைக்கும் பணம் சரியான நோக்கத்துக்கு பயன்படுகிறதே என்ற திருப்தியும் ஏற்படும். இங்கு உண்டியல்காரர்கள் கொண்டு வரும் டிக்கட்டுகள், கலண்டர்கள், தேயிலை பக்கட்டுடிகள், சாம்பிராணி குச்சி என்பவற்றை வாங்கி உங்கள் பணத்தை விரயமாக்காமல் சரியான வழியில் உதவுங்கள். திருப்தியடையுங்கள். சுதந்திரம் தானுக வரும். இந்த உண்டியல் காரர்களின் ரொட்டவும் ஒழியும்.

**அன்பன்**

## தொடரும் கொலைகள்

மனித உரிமைகளுக்கு போராடி உயிர் நீத்த ராஜினி நினைவாக "மரண தண்டனைகள்" என்ற தலைப்பில் சி.வேலாயுதம் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரையில் "யார் தமிழ் ஈழத்தை ஆள்வது என்பதில் எந்த தமிழனுக்கும் இன்று பிரச்சனை இல்லை, எதை எப்படி ஆள்வது என்பதில் தான் தான் பிரச்சனை" என்பது சிந்திக்கத்தக்கது ஒன்று.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை குத்தகைக்கு எடுத்து விடடதாக தமிழீழ விடுதலைப் புலிகள் கருதுகிறுர்கள். என்னுடைய நண்பர் புலிகளுடன் சேரும்போது எல்லா இயக்கங்களையும் ஒன்று சேர்க்க வேண்டும் என்ற கருத்தினைக் கொண்டிருந்தார். தமிழகத்துக்கு சென்று ஆயுதப் பயிற்சி செய்து திரும்பிய பின் சந்தித்த போது முற்று முழுக்க எதிரான கருத்தையே கொண்டிருந்தார். ஓரிரு மாதங்களில் வீரத்தின் விளைநிலத்திற்கு தன்னை உரமாக்கிக் கொண்டார்.

ஒரே இயக்கத்தில் இருந்தவர்கள் "ஒரு தாய் மக்கள்" என்ற உணர்வு பெருமல் பாண்டி பஜாரிலே தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் உமா மகேஸ்வரனை சந்தித்தார்கள். தமிழீழப் பகுதிகளில் அரச இயந்திரங்களை செயலறச் செய்வதன் மூலம் தமிழீழ விடுதலையை முன்னெடுத்த தமிழீழ விடுதலை இராணுவத்தின் ஒபரோய் தேவனை சுட்டுக் கொன்றுர்கள். பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு போராடிய டெலோ சபாரத்தினம் கொல்லப்பட்டாரே, இந்தியாவின் கைப்பொம்மையாய் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப் பத்மநாபா இந்தியாவிலேயே கொல்லபபடடார். அமிர்தலிங்கத்துக்கு என்ன நடந்தது? யார் ஆள்வது என்று நிர்ணயிக்க இருந்தவர்களே இந்த தமிழீழத்தின் சிலையான சிற்பிகள்.

சாவகச்சேரியில் ஒரு பாடசாலை தலைமையை யார் நிர்ணயிப்பது என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப் உம் புலிகளும் மோதியதில் ஒரு பெண் மணி உட்பட இரண்டு ஆசிரியர்கள் கொல்லப்பட்டனர். உரிமை கோரப்படாத கொலைகள், கால ஓட்டத்தில் சந்தர்ப்பங்களிற்கு ஏற்றவாறு உரிமை கோருகின்ற தலைமைகளையே நாங்கள் காண முடிந்தது. தனிமனித நிகழ்வுகளில் உள்ள சரிபிழைகளை ஏகே 47 தீர்மானித்தது. கல்லூரி அதிபர்கள் தங்கள் கடமைகளை சரிவரச் செய்ய முடியவில்லை. டாக்டர்கள் தமது கடமைகளில் பாரபட்சம் காட்டும் நிலைக்கு தள்ளப்பட்டார்கள். ஒவ்வொருவனிடமும் துப்பாக்கி இல்லை என்றால் எதுவும் செய்ய முடியாத நிலைக்கு தமிழ் மக்கள் வந்து விட்டனர். உலகத்திலே நாணிக்கோணி தலைகுனிந்து நிற்கிறோம்.

ஒட்டு மொத்தமான அராஜக நடவடிக்கைகளின் சொந்தக்காரர்களான புலிகள் "ராஜதந்திர நகர்வின் மூலம்" ஜனநாயக நீரோட்டத்தில் கலக்க இருந்தார்களாம். ஈழப் போராட்டத்தில் பாராளுமன்ற கதிரைகளே தஞ்சம் என்றிருந்த கூட்டணி உறுப்பினர்களுக்கும் இவர்களிற்கும் என்ன வித்தியாசம். இலட்சம் கொடுத்தாலும் இலட்சியம் தவருத உடன் பிறப்புகளை காணிக்கை ஆக்கிறோம். கோடானு கோடி சொத்துக்களை பறிகொடுத்தோம். ஏன்? இந்த ஜனநாயக நீரோட்டத்தில் கலப்பதற்காகவோ? தமிழீழ மக்களின் விடுதலையை கலாநிதி பட்டங்களின் தலைமைகள் நிச்சயம் பெற்றுத் தராது.

தனது சொந்தப் பிரச்சனையை சொந்தக் கரங்களில் எடுக்காத எந்த இனமும் உருப்படாது. பசித்த வயிற்றில் இருந்து தான் உண்மைப் புரட்சி தோன்றும்.

**செவந்தி**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திலீபனா அகிம்சாவாதி?

உண்ணாவிரதம் இருந்து இறந்துபோன தீலீபன் பற்றி சிலவார்த்தைகள் குறிப்பிடுவது, இவ்வேளையில் நன்மை பயக்கும் என எண்ணுகிறேன் தீலீபனையும் மகாத்மா காந்தியையும் ஒப்பிட்டு சில பிரச்சார வேலைகளைச் செய்பவர்களை நினைக்கையில் மனதில் சில நெருடல்கள் தோன்றத்தான் செய்கின்றன. மகாத்மா காந்தி வாழ்நாள் பூராவும் ஆயுத மேந்தாது உண்ணாவிரதம் இருந்து தான் போராடினார் என்று அவரின் சத்திய சோதனை மூலம் அறிந்துள்ளோம். தீலீபனை நேரடியாக அறிந்துள்ள எமக்கு அவருக்கிருந்த அஹிம்சை பற்றிய நம்பிக்கைகள் பற்றியும் தெரியும்.

ஆயுதமேந்திய இயக்கமொன்றில் அங்கம் வகித்த தீலீபன் அஹிம்சை வழியில் உண்ணாவிரதம் இருந்து மாண்டு போனது பல சந்தேகங்களை கிளப்பியுள்ளது. 1987 ஆடியில் உரும்பிராய் சந்தியில் மின்கம்ப மரண தண்டனை வழங்கிய தீலீபன் திடீரென்று காந்தியானது எப்படி? எப்போதும் மற்றவர்களை மிரட்டியே காரியம் சாதித்துவந்த தீலீபன் இப்படியான முடிவைத் தானாக எடுத்தாரா? அல்லது எடுக்க வைக்கப்பட்டாரா? என்பது ஆராயப்பட வேண்டிய விடயமாகும். பிரபலமானவர்களை மரணமாக்குவதன் மூலம் மக்கள் ஆதரவைப் பெற்றுக் கொள்வது என்பது தற்காலத்தில் நடைபெறும் அரசியல் சித்து விளையாட்டுகளில் ஒன்று. இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்ததும் மக்கள் இயக்கங்களை மறக்க ஆரம்பித்தனர். புலிகள் மட்டுமல்ல மற்ற இயக்கங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன. ஆயுதங்களை ஒப்படைப்போம் என்று இவர்கள் அறிவித்ததும் மக்கள் பலத்த கரகோஷத்துடன் வரவேற்றது குறிப்பிடத் தக்கதாகும். ஆயுதங்களும், கொலைகளும் தான் இயக்கங்களை வளர்த்தன என்பது மிகவும் கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். ஆயுத ஒப்படைப்பு, அமைதி என்பன புலிகளால் மிகவும் வெறுக்கப்பட்டன. சந்தர்ப்பம் தேடியலைந்த புலிகளுக்கு திலீபனை வைத்து நாடகம் ஒன்றை நடத்துவது அவசியமாக இருந்தது.

திலீபன் உண்ணாவிரதம் இருந்து மரணத்தின் தறுவாயில் இருந்த போது பலாலிக்கு டிக்சீத்துடன் பேசச்சென்று திலீபனின் ஐந்து அம்சக் கோரிக்கைக்கு முக்கியத்துவம் அளிக்காமல் மகாணசபையில் தமக்கு அதிகஇடம் தரவேண்டும் என அடம்பிடித்தது இங்கு ஞாபகத்தில் கொள்ளத் தக்கது. அத்துடன் பிற்பாடு சிறீலங்கா அரசுடன் பேச்சுவார்தையில் ஈடுபட்டபோது திலீபனின் கோரிக்கைகள் பேசப்படவில்லை. இவர்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தபோது அரசு திலீபனின் கோரிக்கைகளுக்கு எதிரான செயல்களில் இறங்கியிருந்தது. ஆனால் புலிகள் அவை பற்றி பெரிதாக குரல் எழுப்பவில்லை.. எனவேதான் திலீபனின் உண்ணாவிரத நாடகம் திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்பட்ட ஒரு செயல்பாடு என குறிப்பிட வேண்டியுள்ளது. இந்திய இராணுவத்திற்கு எதிராக மக்களைத் திசை திருப்ப புலிகளின் தலைமை திலீபனை உபயோகித்தது. இன்று இந்தியா வந்து தமிழர் பிரச்சனையில் தலையிடவேண்டும் என்று கோரிக்கை விடும் புலிகளின் நபுஞ்சகத்தனத்தை நாம் ஆராயாமல் விட முடியாது. இந்தியா தலையிட வேண்டும் என புலிகளில் யாராவது உண்ணாவிரதம் இருப்பார்களோ எனவும் எண்ண வேண்டியுள்ளது.

மரணங்கள் மூலம் யாரும் மகாத்மாவாக முடியாது. இன்று யாரும் திலீபனைப் பற்றி பேசுவதில்லை. ஏனென்றால், சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு கொள்கைகளில் தடம்புரண்டு தலைமைக்கு விசுவாசம் காட்ட உண்ணாவிரதம் இருப்பவர்களை எப்படி அஹிம்சைப் போராளிகள் என அழைப்பது. திலீபனுக்கு அஹிம்சையில் நம்பிக்கையே கிடையாது என்பது யாவரும் அறிந்த விடயம். தலைமையின் நிர்ப்பந்தத்திற்கு அடிபணிந்து தமது கொள்கையை மறந்து வெறும் பிரச்சாரத்திற்காக உயிரை விட்ட திலீபன் பரிதாபத்திற்குரிய ஒரு நபரே!!

தற்போது கோட்டை கைப்பற்றப்பட்ட போது திலீபனின் கனவு நிறைவேறியது என்பது போல் பிரசாரம் நடைபெறுகிறது. "கோட்டை முன்பு ஒல்லாந்தர், ஆங்கிலேயர், சிங்களவர் கையில் இருந்தது. அதன் மூலம் தமிழ் மக்களை அடக்கி ஆண்டு கொண்டிருந்தார்கள். என்று கோட்டை தமிழனின் கையில் வருகிறதோ அன்று தான் தமிழனுக்கு விடுதலை" என்று திலீபன் கூறியதாக கடும் பிரச்சாாம் நடைபெறுகிறது. உண்மையில் இந்த கருத்து பல்கலைக்கழக வரலாற்றுத் துறை விரிவுரையாளர் திருநாவுக்கரசு அவர்களினால் கூறப்பட்டது. இக்கருத்தையே திலீபன் காப்பியடித்தார். சொந்த அரசியல் அறிவே அற்ற திலீபன் திருநாவுக்கரசு போன்றவர்களின் கருத்தை தமது சொந்த சரக்காக விற்று வந்தார். (இவர் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் என்பது நினைவு கூரத்தக்கது) ஆனால் இந்த கருத்து கூட பித்துக்குளித்தனமானது. முன்பு கோட்டையில் ஆண்டவர்கள் எல்லாரும் மக்களை அடக்கினார்கள். இப்போது கோட்டைக்குள் இருப்பவர்களும் போகப் போகிறவர்களும் தமிழ் மக்களை அடக்கத்தான் போகிறார்கள்.

புலிகள் தமிழர்களை உயிரோடு டயர் போட்டு கொழுத்தியபோது இந்த மகாத்மா தான் அதற்கு அரசியல் சாயம் பூசியவர். முன்னால் செல்லும்படி ஆசி கூறியவர் எங்கே என்று திலீபன் இன்னமும் தேடிக் கொண்டிருப்பாரோ என்னவோ?

முன்னாள் யாழ் தளபதி கிட்டுவின் ஆதரவாளர்கள் அனைவரும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள். திலீபனும் கிட்டுவின் ஆதரவாளர் என்பது குறிப்பிடத் தக்கது. உண்ணா விரதத்தில் மரணமடையாமல் இருந்திருந்தால் திலீபனும் நாட்டை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப் பட்டிருப்பார்.

குரும்பை சீவரத்தினம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இலங்கையில் மொசாட்டின் கைங்கரியங்கள்:

முன்னாள் ஏஜண்ட் தரும் தகவல்கள்

# மகாவலித்திட்டம் ஒரு மொசாட் திட்டம்?

"பயங்கரவாதிகளை அடக்க பேய்களுடன் கூட ஒப்பந்தம் செய்வேன்" என்று முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன கூறியிருந்தார். அதனால் தான் என்னவோ அவர் இஸ்ரேலிய மொசாட் படையை வரவழைத்து பயங்கரவாதத்தை அடக்க முயற்சி செய்தார். மொசாட்டின் கைங்கரியங்களில் ஒன்று தான் "முகமூடி ஆட்காட்டிகள்". முன்பு இஸ்ரேலுடனான ராஜரீக தொடர்புகள் துண்டிக்கப் பட்டிருந்ததால் மீண்டும் இஸ்ரேலியரை அழைப்பதற்காக இஸ்ரேலின் நலன் காக்கும் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டது. வந்தவர்கள் பயிற்சியும் கொடுத்து ஆயுத விற்பனையும் செய்தும் பயங்கரவாதத்தை அடக்க முடியவில்லை. பின்பு பிரேமதாசா பதவிக்கு வந்தபின் இந்த அலுவலகம் முற்றாக மூடப்பட்டது.

விக்ரர் ஒஸ்ட்ரோவ்ஸ்கி என்னும் கனடியர் மொசாட்டிற்காக இஸ்ரேலில் பணியாற்றியவர். இவர் 86 இல் மொசாட்டில் இருந்து விலகியிருந்தார். தனது மொசாட் அனுபவங்களை "By way of deception" என்ற நூலில் விபரித்திருக்கிறார். இவர் தனது புத்தகத்தை வெளியிடப் போவதாக அறிந்ததும் இரண்டு மொசாட் உயர் அதிகாரிகள் ஒட்டாவாவில் உள்ள அவரது வீட்டிற்கு வந்து அந்தப் புத்தகத்தை [illegible]ட்டால் விபரீத விளைவுகளை [illegible] வேண்டிவரும் என்று [illegible]றார்கள். இந்த விபரம் [illegible]ர் வாயிலாக வெளியில் [illegible]ரும் சர்ச்சையே கிளம்பி விட்டது. இந்த புத்தகத்தை தடை செய்ய வேண்டும் இஸ்ரேல் முயன்றது. அமெரிக்காவிலும் கனடாவிலும் இந்த புத்தகத்தை தடை செய்ய வழக்குகள் தொடரப்பட்டன. மொசாட் அமெரிக்காவுக்கு எதிராக உளவு வேலைகளில் ஈடுபட்டதும் கனடிய கடவுச்சீட்டுகளை மொசாட் பாவிப்பதும் குறித்து அந்த புத்தகத்தில் குறிப்பிட்டதால் அதன் விளைவுகள் குறித்து இஸ்ரேல் அக்கறை கொண்டிருந்தது. இந்த புத்தகம் முழுவதுமே பொய் என்று இஸ்ரேலிய பிரதமர் குறிப்பிட்டிருந்தார். செய்தி தாபனங்கள் இது குறித்த செய்தியை வெளியில் கொண்டு வந்ததும் இனி இந்த புத்தகத்தை தடை செய்வதால் பயன் இல்லை என்றும் ஏற்கனவே பலத்த பாதிப்பு ஏற்பட்டு விட்டது என்றும் கூறி இஸ்ரேலிய அரசு இந்த புத்தகத்தை தடை செய்ய வேண்டும் என்ற வழக்கை வாபஸ் பெற்று விட்டது. இந்த விளம்பரத்தினால் இந்த புத்தகம் விற்பனையில் பலத்த சாதனையையும் ஏற்படுத்தி விட்டது.

இந்த புத்தகத்தில் இலங்கைக்கும் மொசாட்டுக்குமான தொடர்புகள் குறித்து விபரிக்கப் பட்டிருக்கிறது. புலிகளு க்கும் மொசாட் பயிற்சி கொடுத்ததாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. (புலிகளின் சில நடத்தைகளுக்கான காரணம் புரிகிறது) முழுமையாக ஏமாற்றப் பட்டது தமிழ் மக்கள் என்றே சொல்லத் தோன்றுகிறது. இந்த புத்தகத்தில் இலங்கை குறித்த விடயங்கள் மறுபிரசுரமாகின்றன.

ஆ-ர்

இஸ்ரேல் ஆயுதம் விற்பனை செய்வதற்கு மூன்று படிமுறைகளை கையாள்கிறது. முதலில் அந்த நாட்டுக்கு என்ன தேவை, எதற்கு பயப்படுகிறது, யாரை அதன் எதிரியாக கருதுகிறது போன்றவற்றை அறிந்து கொள்ளும். இத்தேவைகள் மூலம் ஒரு நெருக்கமான உறவை ஏற்படுத்தி பின்பு அந்த நாட்டுக்கு இஸ்ரேல் ஆயுதமோ பயிற்சியோ எது தேவைப்படுமோ அதை வழங்க இஸ்ரேல் தயாராய் இருக்கிறது என்பதை தெரியப்படுத்தும். அந்த நாட்டின் தலைவர் இதில் விருப்பமுடையவராக இருந்தால் மொசாட் ஏஜண்ட் நாட்டின் தலைவருக்கு ஆயுதங்களுடன் வேறு பொருட்களையும் (உதாரணத்துக்கு விவசாய உபகரணங்களையும்) வாங்க வேண்டும் என்று கூறுவார். இந்த நிலையில் இஸ்ரேலுடனான ராஜதந்திர தொடர்புகளை ஏற்படுத்தினால் மட்டுமே தொடர்பு அதிகரிக்கலாம் என்று கூறும் நிலைக்கு அந்த நாட்டின் தலைவர் தள்ளப்படுவார். பின்புறக்கதவால் இவ்வாறான உறவுகளை ஏற்படுத்துவதற்கு இதுதான் கட்டாயமான வழி.

(இஸ்ரேல் தன் நலன் காக்கும் அலுவலகத்தை வைத்திருந்ததும் இஸ்ரேலிய "விவசாய" நிபுணர்கள் நம் நாட்டில் இப்போதும் பணிபுரிவதும் வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்)

(17ம் பக்கம் பார்க்க)

அவர்கள் இதை இலங்கையில் செய்தார்கள். அமி யார் என்ற மொசாடடின் தூரகிழக்கு, ஆபிரிக்காவுக்கான பிரிவுத்தலைவர் இந்த தொடர்புகளை ஏற்படுத்தினார்.

பி.ரி.படகுகள் உட்பட பல உபகரணங்களை வழங்குவதன் மூலம் இராணுவ ரீதியான தொடர்புகளை ஏற்படுத்தியது. அதே நேரம் யாரும் அவரது கூட்டாளிகளும் தமிழ் கொரில்லாக்களுக்கு பி..ரி படகுகளுக்கு எதிராக தாக்குதல் நடத்தும் உபகரணங்களை வழங்கினர். அத்துடன் இஸ்ரேலியர்கள் இரு பக்கத்தினருக்கும் (மற்ற பகுதியினருக்கு தெரியாமல்) பயிற்சி வழங்கினர். அத்துடன் உலக வங்கியையும் மற்ற முதலீட்டாளர்களையும் ஏய்த்து அந்த பண உதவியைக் கொண்டு ஆயுதங்கள் வழங்கவும் உதவி செய்தது.

இலங்கை அரசு விவசாயிகள் போராட்டம் குறித்து கவலை கொண்டிருந்தது. அந்த விவசாயிகளை நாட்டின் ஒருபுறத்தில் இருந்து மறுபுறத்துக்கு கொண்டு செல்ல அரசு விரும்பியது. அதற்கு ஒரு நியாயமான காரணம் தேவைப்பட்டது. இந்த இடத்தில் அமி உதவிக்கு வந்தார். இவர் தான் மகாவலித் திட்டத்தை உருவாக்கினார்..

இதன் மூலம் நாட்டின் மின்சார உற்பத்தி இரு மடங்காவதுடன் 750 ஆயிரம் ஏக்கர் நிலம் நீர்ப்பாசன வசதி பெறும். இதற்கு உலக வங்கியுடன் சுவீடன், கனடா, ஜப்பான், ஜேர்மனி, ஐரோப்பிய பொருளாதார சமூகம், அமெரிக்கா என்பன 250 கோடி டொலரை முதலீடு செய்யும். இந்த முப்பதாண்டு காலத்திட்டத்தை 77 இல் ஜே. ஆர் மொசாட் உதவியுடன் முக்கியமானதாக்கினார்.

உலக வங்கி இந்த திட்டத்திற்கு 25 கோடி டொலர் கொடுக்க உறுதியளித்திருந்தது. விவசாயிகளை பிரித்து குடியேற்றவும் இந்த திட்டம் நடைமுறைச் சாத்தியமானது என்று நிரூபிக்கவும் இரண்டு இஸ்ரேலிய நிபுணர்களை மொசாட் ஒழுங்கு செய்தது. ஒருவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மொசாட்டின் கைங்கரியங்கள்...

ஜெருசலேம் பல்கலைக் கழகத்தின் பொருளாதார நிபுணர், மற்றவர் விவசாய பேராசிரியர். இவர்கள் ஆராய்ச்சி செய்து மகாவலித் திட்டத்தின் முக்கியத்துவத்தைப் பற்றியும் அதற்கான செலவையும் ஆராய்ந்து கட்டுரைகள் சமர்ப்பித்தனர். இஸ்ரேலிய நிர்மாண நிறுவனம் இத்திட்டத்தில் முக்கிய பகுதி ஒன்றை கொந்தராத்துக்கு எடுத்தது.

காலத்துக்கு காலம் உலக வங்கி நிபுணர் இந்த திட்டத்தின் முன்னேற்றம் பற்றி ஆராய வரும் போது அவர்களை எப்படி ஏமாற்றுவது எப்படி என்று உள்ளூர்க்காரர்களுக்கு சொல்லிக் கொடுக்கப் பட்டிருந்தது. இதன்படி அந்த அதிகாரிகளை சுற்றி சுற்றி ஒரே இடத்தைக்காட்டி, பின்பு காட்டுவதற்காகவே என்று நிர்மாணிக்கப்படும் சிறிய இடத்துக்கு கொண்டு சென்று காட்டுவார்கள்.

பின்பு நான் மொசாட் தலைமையகத்தில் யாரின் கீழ் வேலை செய்யும் போது ஜே. ஆரின் மருமகள் "பெனி"யின் இரகசிய விஜயம் ஒன்றின் போது அவரைச் சுற்றிக் காட்டும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் போக விரும்பிய இடம் எல்லாம் கூட்டிச் சென்றோம். நாங்கள் பொதுவிடயங்கள் பற்றிப் பேசினோம். இருந்தாலும் மகாவலித் திட்டம் பற்றியும் அந்த பணம் எவ்வாறு ஆயுதங்கள் வாங்க பயன்படுகிறது என்றும் கூறினார்.

அந்த நேரம் இலங்கைக்கும் இஸ்ரேலுக்கும் எந்தவித ராஜரீக உறவும இருக்கவில்லை. உண்மையில் இலங்கை இஸ்ரேலுக்கு எதிராக பொருளாதார தடை விதித்திருந்தது. பெனி இஸ்ரேலுக்கும் இலங்கைக்கும் இடையில் நடைபெறும் இரகசிய பேச்சுவார்த்தை பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார்.

ஆனால் அந்த பேச்சுவார்த்தை குறித்த செய்தி வெளியில் வந்தபோது 150 மொசாட்டுக்கு ஆட்சேர்க்கும் உறுப்பினர்கள் இருந்ததாக செய்தி வந்தது. உண்மையில் உலகம் முழுவதும் மொசாட்டுக்கு உலகம் முழுவதுமே அவ்வளவு தொகை இருந்ததில்லை. உண்மையில் அமியும் அவரது உதவியாளருமே இலங்கையில் இருந்திருக்கின்றனர்.

## உண்ணாவிரதம் இருப்பவர்கள் எல்லாம் மகாத்மாக்கள் அல்ல..

இன,மத, மொழி, சாதி, நிற வெறி கொண்ட, அன்பு, பண்பு,பாசம் என்றால் என்ன என்று தெரியாத கொலை,கொள்ளை போன்ற படுபாதகச் செயல்களை செய்தவர்கள் உண்ணாவிரதம் இருந்து இறந்தால் அவர்களை காந்தியுடன் ஒப்பிடலாமா?

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம். இதை யாராவது நம்புவார்களானால் அவர்களைப் போல் முட்டாள்கள் யாரும் இருக்க முடியாது. புலிகளின் தணியாத தாகம் தங்களுக்கு எதிரான மற்றக் குழுக்களை சேர்ந்த மக்கள் அபிமானம் பெற்ற யாராவது இருந்தால் அவர்களை அழிப்பது தான். ஒருமுறை புளொட் குழுவைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் அரியாலையில் புலிகளால் படுகொலை செய்யப்பட்டனர். இது சம்பந்தமாக புளொட் யாழ். அரசியல் பொறுப்பாளர் திலீபனிடம் சென்று கேட்ட போது திலீபன் தெரியாமல் நடந்து விட்டதாக கூறினார். ஆனால் இதற்கு மன்னிபுக் கேட்கவில்லை. இதே நேரம் புளொட் பொறுப்பாளர் "எப்படி தெரியாமல் நடக்கும்" என்று கேட்டபோது உடனே திலீபன் (இந்நேரத்தில் அவர் இரண்டு மூன்று சிறுகற்களை கையில் வைத்து மேலே எறிந்து விளையாடிக் கொண்டிருந்தார்.) கற்களை கீழே எறிந்து விட்டு "ஓம், சுட்டனுங்கள் தான், என்ன செய்யப்போறாய்" என்று கேட்டு விட்டு முறைத்தார்.

அதுமட்டும் அன்றி இலங்கை இராணுவத்தை விட பயங்கரமான, மிகக் கொடுமையான பாதகச் செயல்களை செய்த (உயிருடன் டயர் போட்டுக் கொழுத்தியும் துண்டு துண்டாக வெட்டியும், குழந்தைகள் உட்பட) புலிகளுக்கு தனது உயிர் பிரியும் வரை (இவரது மன உறுதியை

(17ம் பக்கம் பார்க்க)

### உண்ணாவிரதம்...

பாராட்டும் அதே வேளை இவரது அறியாமையால் இவரது உண்ணாவிரத சாவு தேவை யற்றது என்பதையும் குறிப்பிட வேண்டும்) துணை போன (உண்ணாவிரதத்தின் போது கூட புலிகளின் பாதகச் செயல்களுக்கு ஊட்டம் கொடுத்துப் பேசினார். ) இவரை இந்த வகையிலும் மகாத்மா காந்தியுடன் ஒப்பிட முடியாது. இப்படி ஒப்பிடு பவர்கள் காந்தீயச் சிந்தனைகளை புரட்டிப் பார்க்கவும்.

மகாத்மா காந்தி பொதுவாழ்வில் அடியெடுத்து வைத்தவுடன் எநத தவறும் செய்யாமல் (முஸ்லிம் பெண்களை இந்து வெறியர்கள் கற்பழித்த ய "உங்கள் பற்களும் ளும் எங்கு போனதம்மா" என்று கேட்டவர்) சாகும் வரை அவ்வாறே வாழ்ந்தார். எந்த தவறும் செய்யாமல், புலிகள் மற்றும் மாற்றுக் குழுக்கள் செய்யும் பாதகச் செயல்களுக்கு எதிராக குரல் கொடுத்து, மக்களின் நன்மைக்காக உண்ணாவிரதம் இருந்து இறந்திருந்தால் காந்தியுடன் ஒப்பிடலாம். மேற்குறிப்பிட்ட சம்பவங்களில் எதையாவது திலீபன் [illegible] என்று காந்தியை விட மேலானவர் என்று கூறும் மேதாவிகள் கூறுவார்களா? மகாத்மா காந்தி இன,மத, சாதி வெறிக்கு எதிரானவர். அவர் இந்துக்களும் முஸ்லிம்களும் கலவரங்களில் ஈடுபட்டிருக்கும் போதுதான் உண்ணாவிரதம் இருந்தார்..

ஜீவா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

84 ஜுலை நடுப்பகுதியில் இந்திய அணு ஆராய்ச்சி விஞ்ஞானிகளின் தூதுக்குழு ஒன்று இரகசிய விஜயம் ஒன்றை மேற்கொண்டு வந்திருந்தது. அணுகுண்டுப் பயமுறுத்தல் குறித்து இந்தியா கவலை கொண்டிருந்தது. இஸ்ரேலிய அணுவிஞ்ஞானிகளைச் சந்தித்து தகவல் பரிமாற்றம் செய்ய வந்திருந்தது. ஆனால் இஸ்ரேலியர்கள் தகவல்களை அறிவதில் காட்டிய ஆர்வத்தை தகவல்களை வழங்குவதில் காட்டவில்லை.

அவர்கள் புறப்பட்ட மறுநாள் ஐம்பது இலங்கையர்கள் வந்து சேர்ந்தார்கள். இலங்கையில் இருந்து பயிற்சிக்கு வருவதாக அமி கூறினர். அவர்களின் வருகைக்காக அமி விமான நிலையத்தில் காத்திருக்கும்போது நான் அவரைச் சந்தித்தேன். அமி எனக்குச் சொன்னர் "அவர்கள் வரும்போது நீ முகம் சுழிக்க வேண்டாம். அவர்கள் குரங்குகள் மாதிரி. அவர்கள் வளர்ச்சியடையாத ஒரு இடத்தில் இருந்து வருகிறார்கள். அவர்கள் ...த்தில் இருந்து இறங்கி அதிக காலம் இல்லை"

வந்த ஒன்பது இலங்கையரையும் நாங்கள் விமான நிலைய பின் கதவால் ஒரு குளிருட்டப்பட்ட வாகனத்தில் ஏற்றினோம். பின்பு இந்த எண்ணிக்கை ஐம்பதாகியது. இவர்கள் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டார்கள்.

1. பயங்கரவாத தடுப்புக் குழு: கடத்தப்பட்ட பஸ், விமானங்களை எப்படி மீட்பது, கட்டடங்களில் உள்ள கடத்தல் காரரை சமாளிப்பது, ஹெலிகொப்டரில் இருந்து கயிற்றில் இறங்குவது போன்ற பயிற்சிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டது. அவர்களும் உஸி இயந்திர துப்பாக்கிகள் உட்பட இஸ்ரேலிய தயாரிப்பான ஆயுதங்கள், குண்டு ...ளைக்காத கவசங்கள், விசேட ...னேட்டுக்கள் போன்றவற்றை வாங்குவார்கள்.

2.ஆயுத கொள்வனவு குழு: இவர்கள் பெருமளவில் ஆயுதங்கள் வாங்க வந்தார்கள். அவர்கள் ஏழெட்டு பி.ரி. ரக டெவோரா பீரங்கிப்படகுகள் வாங்கினர்கள்.

3.உயர் அதிகாரிகளைக் கொண்ட குழு: ராடர் மற்றும் கடற்படை உபகரணங்கள் வாங்க வந்தவர்கள்.

# புலிகளுக்கு மொசாட் பயிற்சி?

## By Way Of Deception இலிருந்து....

நான் ஜே.ஆரின் மருமகளுக்கு உல்லாசப் பயண இடங்களை இரண்டு நாட்களுக்குக் காட்ட வேண்டியிருந்தது. இதன் பின் தலைமையகத்தில் இருந்து வேறு ஒருவர் அவரைக் கவனிப்பதற்கு நியமிக்கப்பட்டார். பெனி ஒரு இனிமையான பெண், கோறி அக்குவினே போல். அவர் புத்த மதத்தை சேர்ந்தவர். (அவரது கணவர் புத்த மதத்தை சேர்ந்தவர்) இருந்தாலும் ஒரு. கிறிஸ்தவ பெண் போலவே இருந்தார். இதனல் அவர் கிறிஸ்தவ புனித தலங்களை பார்க்க விரும்பினர்.

அடுத்து ரேடர் உபகரணங்கள் வாங்க வந்த உயர் அதிகாரிகளை கவனிக்க நியமிக்கப்பட்டேன். அஷோத் என்னும் இடத்தில் உள்ள ரேடர் எனுமிடத்தில் உள்ள ரேடார் உற்பத்தியாளர் நிறுவனமான அல்ற்ரு கூட்டிச் செல்லும்படி கூறப்பட்டேன். அவர்கள் என்ன வாங்கப் போகிறார்கள் என்ற விபரங்களை அறிந்த நிறுவன பிரதிநிதியிடம் கூறிய போது அவர் சொன்னர் "இவர்கள் ரேடாரை வாங்க மாட்டார்கள்." "ஏன்?" நான் கேட்டேன். "இந்த விபரங்கள் இந்த குரங்குகளால் எழுதப்படவில்லை. இவை பிரிட்டிஷ் ரேடார் உற்பத்தி நிறுவனமான டெக்காவினல் எழுதப்பட்டது. எனவே தாங்கள் என்ன வாங்க வந்திருக்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். (இந்த குரங்குகளுக்கு) வாழைப்பழத்தைக் கொடுத்துவிட்டு திருப்பி அனுப்பி விடு. உன் நேரத்தை வீணாக்காதே"

"சரி அவர்களைத் சந்தோசப்படுத்த இந்த ரேடரின் விபரங்கள் அடங்கிய கைநூல் ஏதாவது இருக்கிறதா?" எங்கள் உரையாடல் எபிரேய மொழியில் நடந்தது. வந்தவர்கள் சிற்றுண்டி அருந்திக் கொண்டும் தேனீர், கோப்பி குடித்துக் கொண்டும் இருந்தார்கள். தாங்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்று இலங்கையர்கள் நினைக்க கூடாது என்பதற்காக அவர்களுக்கு ஒரு விரிவுரை நடத்துவதில் ஆட்சேபனை இல்லை என்றார்.

"நாங்கள் அப்படிச் செய்தால் கொஞ்ச நேரம் சந்தோசமாய் இருப்போம்"

அடுத்த அறை ஒன்றுக்கு சென்று துறைமுகங்களில் சிந்தப்பட்ட எண்ணெயை உறுஞ்சும் இயந்திரங்களின் தொழில்நுட்ப மாதிரிப் படங்களை கொண்டு வந்தார். கண்ணைக் கவரும் வண்ணத்தில் அந்த படங்கள் இருந்தன. எல்லாமே அதில் எபிரேய மொழியில் எழுதப்பட்டிருந்தது. ஆனல் அவர் அந்த "அதிசக்தி வாய்ந்த ரேடர்" பற்றி ஆங்கிலத்தில் விரிவுரை நிகழ்த்தினர். என்னல் சிரிக்காமல் இருக்க கஷ்டமாய் இருந்தது. அந்த ரேடர் நீந்திக் கொண்டிருக்கும் ஒருவரின் சப்பாத்தின் அளவு, அவரது பெயர், விலாசம், இரத்த வகை என்பவற்றைக் கண்டுபிடிக்கும் என்று கூறினர்.

அவரது விரிவுரை முடிந்ததும் இலங்கையர்கள் அவருக்கு நன்றி கூறினர்கள். தாங்கள் இந்த தொழில்நுட்ப வளர்ச்சி பற்றி ஆச்சரியப்படுவதாகவும் ஆனல் அவை தங்கள் கப்பல்களில் பொருத்த முடியாது என்றும் சொன்னர்கள். அவர்கள் தங்கள் கப்பல்களைப் பற்றி எங்களுக்கு சொல்கிறார்கள். அவற்றை நாங்கள் தானே கட்டினேம்.

என்னை ஹோட்டலில் விட்ட போது அவர்கள் ரேடரை வாங்க மாட்டார்கள் என்று அமிக்கு சொன்னேன். "ஆம், எங்களுக்குத் தெரியும்" அமி பதிலளித்தார்.

இலங்கையில் விசேட அதிரடிப் படை பயிற்சி பெறும் இடத்துக்கு சென்று அவர்களுக்குத் தேவையானவற்றை எடுக்கும்படியும் அவர்களை அன்று மாலை டெல் அவிவுக்கு கொண்டு வருமாறும் அமி கூறினர். அத்துடன் அங்கு இடமாற்றம் செய்யப்பட்ட யோஸியுடன் சகல விடயங்களும் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என்றும் எச்சரிக்கை செய்தார்.

யோசி இஸ்ரேலியரால் பயிற்சியளிக்கப்படும் ஒரு குழுவைக் கவனித்துக் கொண்டிருந்தார். ஆனல் அவரால் பயிற்றுவிக்கப்படுவோர் எனது குழுவைச்சந்திக்க கூடாது. அவர்கள் எனது சிங்களக் குழுவின் பரம எதிரிகள், தமிழர்கள்.

தமிழர்களுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொமாண்டோ கடற்படைத் தளத்தில் ஊடுருவுதல், கண்ணி வெடி வைத்தல், தொலை தொடர்புகள், டெவோரா வகை கப்பல்களை தகர்த்தல் போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது.

இவர்களில் கிட்டத்தட்ட 28 பேர் ஒவ்வொரு குழுவிலும் இருந்தார்கள். இதனால் யோஸி தமிழர்களை ஹைபாவுக்கு கூட்டிச் செல்வதாகவும் நான் சிங்களவர்களை டெல்அவிவுக்கு கூட்டிச் செல்வதாயும் ஒழுங்காயிற்று. இதனால் ஒருவரை ஒருவர் சந்திக்க மாட்டார்கள்.

சிங்களவர்களும் தமிழர்களும் ஒரே நேரத்தில் கியான் சிர்க்கின் என்ற இடத்தில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தபோது தான் உண்மையான பிரச்சனை தொடங்கியது. அது பெரிய தளமாகும். இருந்தாலும் ஒரு தடவை இரு குழுக்களும் ஒரு உடற்பயிற்சி நேரத்தின் போது சில யார் வித்தியாசத்திலேயே ஒன்றையொன்று கடந்து சென்றன.

தங்கள் அடிப்படை பயிற்சி முடிந்ததும் சிங்களவர்களும் கடற்படை தளத்துக் குகொண்டு சொல்லப்பட்டார்கள். (இஸ்ரேலியர் தமிழர்களுக்கு பழக்கிய முறைகளை எப்படி எதிர்கொள்வது என்பது பற்றி)

அவர்கள் டெல் அவிவில் ஒருவரை ஒருவர் சந்திக்காதபடி நாங்கள் அவர்களுக்கு தண்டனைகளையும் இரவு நேரப் பயிற்சிகளையும உருவாக்க வேண்டியிருந்தது.

அமி என்ற ஒரு மனிதரின் இந்த செயல் வெளியே தெரிந்தால் இஸ்ரேலில் அரசியல் நிலை சிக்கலுக்குள் மாட்டியிருக்கும்.

முன்னாள் பிரதமர் பெரஸ் இது குறித்து தெரிந்திருந்தால் நித்திரையே கொண்டிருக்கமாட்டார்.

மூன்று கிழமை முடிந்ததும் சிங்களவர்கள் அற்லிட் இல் உள்ள மிக இரகசிய கமாண்டோப் படைத்தளத்துக்கு கொண்டு செல்லப்பட்டார்கள். அமி தான் இவர்களுடன் செல்ல மாட்டேன் என்று கூறினார். இலங்கையர்களுக்கு சாய்ரேட் மட்கல் பயிற்சி அளிக்கும். இந்த அமைப்பு தான் எண்டபே தாக்குதலை நடத்தியது.

"பார் எங்களுக்கு ஒரு பிரச்சனை. இந்தியாவிலிருந்து 27 பேர் கொண்ட விசேட குழு ஒன்று வரவிருக்கிறது" அமி கூறினார்.

"கடவுளே, என்ன இது, எங்களிடம் சிங்களவர்கள் வந்தார்கள். தமிழர்கள்.. இப்போது இந்தியர்கள். அடுத்தது யார்?" நான் பதில் அளித்தேன்.

**மொசாட் பயிற்சிக்கான செலவீனம்**

முன்பு பிரிட்டிஷ் தளம் ஒன்று இருந்த இடத்தில் கபார் சிக்கின் என்ற இடத்தில் வெளிநாட்டு துருப்புகளுக்கு பயிற்சி நடைபெறுகிறது.

வழமையில் பயிற்சி தேவைக்கேற்ப ஆறு கிழமை தொடக்கம் மூன்று மாதம் வரை நடைபெறும். இரவொன்றுக்கு ஒருவருக்கு 50 தொடக்கம் 75 டொலர் வரை அறவிடப்பட்டது. அத்துடன் தினசரி நூறு டொலர் பயிற்சியாளருக்கு ஒவ்வொருவரும் கொடுக்க வேண்டும். (பயிற்சி கொடுத்தவர்களுக்கு இந்த பணத்தில் இருந்து எதுவும் கிடைக்கவில்லை. அவர்களுக்கு வழமையான இராணுவ சம்பளமே வழங்கப்பட்டது) உணவுக்கு சராசரி முப்பது,நாற்பது டொலர் செலவாகும். ஆயுதங்கள், வெடிமருந்துகள் என்பவற்றுக்கு நாள் ஒன்றுக்கு ஐம்பது டொலர்.

அறுபது பேர் கொண்ட குழு ஒன்றுக்கு ஒவ்வொருவரும் ஒரு நாளுக்கு முன்னூறு டொலர் வீதம் 18 ஆயிரம் டொலர்கள். மூன்று மாதத்துக்கு பதினாறு லட்சம் டொலர்கள்.

இதை விட ஹெலிகொப்டர் வாடகை மணித்தியாலத்துக்கு ஐயாயிரம் தொடக்கம் ஆறாயிரம் டொலர்கள். சில நேரங்களில் பதினைந்து ஹெலிகொப்டர்கள் பாவிக்கப்படும்.

பஷுக்கா ஷெல் ஒன்று 220 டொலர்.

மோட்டார்கள் ஒன்று ஆயிரம் டொலர்.

விமான எதிர்ப்பு துப்பாக்கிகளிற்கான ரவைகள் முப்பது தொடக்கம் நாற்பது டொலர்கள் வரை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அப்பட்டமான பொய்! இலங்கை அரசின் சதி!

### வெளிநாட்டுச் சிற்றேடுகள் இலங்கை அரசுக்கு ஆதரவாய் பிரசாரம்!

# புலிகள் வழமை போல் மறுக்கிறார்கள்

**"அரச ஆதரவு, உள்நாட்டு, வெளிநாட்டு சிற்றேடுகளும் (வெளிநாட்டு சிற்றேடுகள் என்று எதை கூறுகிறார்களோ தெரியவில்லை. முன்பு உலகத்தமிழர் பத்திரிகை தான் அரசு சார்பு பத்திரிகையாக இருந்தது) விடுதலைப்புலிகளுக்கும் மொசாட்டுக்கும் உள்ள தொடர்பு பற்றி பிரஸ்தாபித்து முழுவிபரங்களை அம்பலப்படுத்த இருப்பதாக கொழும்பு அரசின் பிரசார பாணியில் செய்தி வெளியிட்டதை" அடுத்து விடுதலைப்புலிகளின் கனடாக்கிளையான உலகத்தமிழர் இயக்கம் வெளியிட்ட செய்திச் சுருள் ஒன்றில் (4.10.90) மொசாட்டிடம் புலிகள் பயிற்சி பெற்றது குறித்த செய்தி ஒன்று வெளிவந்திருந்தது. அந்த செய்திச்சுருளிலிருந்து சில பாகங்கள் இங்கு மிக்க நன்றியுடன் பிரசுரமாகின்றன.**

இந்தப் புத்தகத்தில் வெளிவந்த மற்றொரு குறிப்பினை திரித்தும், மிகைப்படுத்தியும் விடுதலைப்புலிகளை சிக்கலில் மாட்டவும் கொழும்பு அரசு முனைந்துள்ளது. விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் மொசாட் நிறுவனத்துக்கும் தொடர்பு உண்டு என்பதே அதுவாகும். இதன் மூலம் உலக அபிப்பிராயத்தை விடுதலைப் புலிகளுக்கு எதிராக மாற்றுவதே அரசின் தந்திரம். இஸ்லாமிய குறிப்பாக அரபுலக நாடுகள் மொசாட் பிரச்சனையால் ஆத்திரப்பட்டு முழுமையாக விடுதலைப்புலிகளுக்கு எதிராக திரும்ப வேண்டும். தமிழ் முஸ்லிம் மக்களிடையே பாரிய பிளவுகள் ஏற்பட வேண்டும். மற்றும் தமிழ் மக்களில் ஒரு சாரார் கூட மொசாட் விடுதலைப்புலிகள் உறவினால் கசப்படைய வேண்டும் என்பதே திட்டம்.

இதற்கு கொழும்பு அரசு கையாண்ட தந்திரம் விடுதலைப் புலிகளுக்கும் மொசாட்டுக்கும் உறவுண்டு என்று புத்தகத்தில் குறிப்பிட்டிருப்பதாக தனது உள்நாட்டு, வெளிநாட்டு சாதனங்கள் மூலம் பரப்புவதாகும். உள்நாட்டு பேரேடுகள், வெளிநாட்டு சிற்றேடுகள் மூலம் இந்த பொய்யை பரப்பி வருகிறது.

இதன்படி செப் 23 இல் தனது கட்டுப்பாட்டில் உள்ள ஏரிக்கரையேடு "ஒப்சேவரில்" தலைப்புச் செய்தியாக புலிகளுக்கு மொசாட் இஸ்ரேலில் பயிற்சி அளித்தது என்று குறிப்பிட்டிருந்தது. இதையடுத்து அரச ஆதரவு, உள்நாட்டு, வெளிநாட்டு சிற்றேடுகளும் விடுதலைப்புலிகளுக்கும் மொசாட்டுக்கும் உள்ள தொடர்பு பற்றி பிரஸ்தாபித்து முழு விபரங்களை அம்பலப்படுத்த இருப்பதாக கொழும்பு அரசின் பிரசார பாணியில் செய்தி வெளியிட்டன.

ஆனால் இதில் முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால் ஒப்சேவர் பத்திரிகைத் தலைப்பில் போட்டதற்கு ஆதாரமாக எந்தச் செய்திக்குறிப்பும் பத்திரிகைக் கட்டுரையில் இடம் பெறவில்லை. இதற்கு அடிப்படைக்

## புலிகளின் மறுப்பு....

காரணம் மூலப்புத்தகத்தில் அதாவது By way of deception என்ற நூலில் எந்தவொரு இடத்திலும் தமிழீழ விடுதலைப்புலிகள் என்ற இயக்கம் தான் மொசாட் பயிற்சி பெற்றது என்று குறிப்பிடப்படாததே.

சிறிலங்காவைச் சேர்ந்த சிங்கள அரச படையினருக்கு பயிற்சி அளித்த அதே வேளை தமிழ் குழுவினருக்கும் இரகசியமாக மொசாட் பயிற்சியளித்ததாக புத்தகம் சொல்கிறது. இந்த தமிழர் குழு விடுதலைப்புலிகள் தான் என்று கொழும்பு அரசுக்கு ஆதரவான பத்திரிகைகள் செய்தியை திரித்து குற்றம் சுமத்த முற்படுகின்றன. ஆனால் புத்தகத்தை வாசிக்கும் எவரும் இந்த அப்பட்டமான திரிபுப்பிரசாரத்தை உணர்ந்து கொள்ளலாம்.

எனவே எந்த ஆதாரமும் இல்லாமல் கொழும்பு ஒப்சேவர் பத்திரிகை விடுதலைப் புலிகளுக்கு மொசாட் பயிற்சி அளித்தது என்று கூறியுள்ளது இதே பாணியில் ஏனைய அரசு ஆதரவுப் பத்திரிகைகள் உள், வெளிநாடுகளில் விடுதலைப் புலிகளுக்கு மொசாட் பயிற்சி என்று செய்தி வெளியிட்டு வருகின்றன. ஒப்சேவரின் திரிபுப் பிரசாரத்துக்கு மற்றொரு எடுத்துக்காட்டு. கடந்த 30.09.90 இல் வெளிவந்த வெளிவந்த முற்பக்க செய்தியாகும். தமிழ் புலிகளுக்கு மொசாட் ஆயுதங்கள் விற்கிறது ஒஸ்ட்ரொல்ஸ்கி. இதன்படி நூலாசிரியர்களில் ஒருவரான ஒஸ்ட்ரொஸ்கி பத்திரிகை பேட்டி ஒன்றில் இவ்வாறு கூறியதாக தலைப்பில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் செய்தியை படித்துப் பார்த்தால் தமிழ் போராளிகள் என்ற பதத்தையே ஒஸ்ட்ரொஸ்கி கையாண்டுள்ளது தெரிகிறது. ஒப்சேவரின் திரிப்பு தலைப்புச் செய்தி மூலம் சதி நோக்கம் புலனாகிறது. விடுதலைப் புலிகளை மாட்டி வைக்க முனையும் திட்டம் தெரிகிறது. இங்கே கவனிப்பட வேண்டியது. தமிழ் குழுவுக்கு மொசாட் பயிற்சி அளித்ததா? இல்லையா? என்பதல்ல. சம்பந்தப்பட்ட புத்தகத்தில் விடுதலைப் புலிகளுக்கு மொசாட் பயிற்சி அளித்தது என்று எவ்வித ஆதாரக்குறிப்பும் இல்லை யென்பதும் மாறாக அப்படி இருந்தது என்று செய்தி வெளியிடும் பத்திரிகைகள் வேண்டும் என்றே அரசுக்கு ஆதரவாக செயல்படுகின்றன என்பது ஆகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சிந்தியுங்கள் செயல்படுங்கள்

இலங்கையில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்த இந்த துண்டுப்பிரசுரம் துாண்டில் சஞ்சிகையில் இருந்து மறுபிரசுரமாகிறது.

தமிழ் மக்கள் மீது இன்று சொல்லொணாத் துன்பங்களையும் அழிவுகளையும் கட்டவிழ்த்து அதன் மீது தமிழீழத் தங்க கோபுரம் கட்டப் போவதாக கூறுகின்ற விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உண்மையான சொருபத்தை இனம் கண்டு கொள்ளத் தவறுவதும் அம் மாயைக்குள் தொடர்ந்தும் அமிழ்ந்து மேலோட்டமாகவும் கண்மூடித் தனமாகவும் இராணுவ நடவடிக்கைகளை மட்டும் கணிப்பிட்டுக் கொண்டிருப் போமாயின் எமது இனம் வாழ்வதற்குரிய எல்லா ஆற்றல்களையும் இழப்பது நிச்சயம்.

இன்று இளம் சந்ததியினர் பலர் நேர்மையுடன் தியாகத்துடன், தமிழ் மண் காப்போம் என்ற உணர்வுடன், தமது உயிரைக் கொடுக்க முனைகின்றனர். ஆனால் உண்மையில் இவர்கள் எதற்காக, யாருக்கா, எந்தக் கொள்கைக்காக தியாகம் செய்கிறார்கள்? இவர்கள் எமது விடுதலைப் போராட்டத்தில் வளர்ந்து வந்த ஓர் அழிவு அரசியலின் பகடைக்காய்களாக வீணே அழியப் போகிறார்களா?

ஆம். ஓர் துப்பாக்கிக்காக பத்து இளைஞர்கள் உயிர் துறக்கிறார்கள், ஆகவே ஓர் துப்பாக்கி பத்து உயிர்களின் பெறுமதி பெறுகிறது என்று கூறும் அளவுக்கு பித்துப் பிடித்துப் போயுள்ள ஒரு தலைமையின் கீழ் விடுதலை என்பது வரப் போவதில்லை.

துப்பாக்கி முனையில் கருத்து சுதந்திரத்தை அடக்கி, நாற்றுக் கணக்கான போராளிகளை அழித்து, மக்களை சிந்திக்காது, அல்லது சிந்திப்பவர்களை மௌனிகளாக்கி விட்டு இன்று மக்களின் முன் வந்து துப்பாக்கியை வணங்குவோம், பூஜிப்போம் என்று கூறும் அளவுக்கு இவர்கள் நிலை தழும்பி விட்டனர்.

இயக்கத்துக்குள்ளும், வெளியேயும் சுயமாக சிந்திக்க விடாது, ஹிட்லர் பாணியில் தலைமை வழிபாட்டை வளர்த்து சுத்த இராணுவக் கண்ணோட்டத்தில் செயல்படும் இவர்கள் சுயமாக சிந்திப்பது பற்றிக் கூறுவது "சாத்தான் வேதம் ஓதுவதை ஒத்ததாகும்"

தமிழீழம் என்ற கோசம் இவர்களுக்கு இயக்கத்துக்கு ஆட்களை சேர்ப்பதற்கு, அவர்களை உணர்ச்சியூட்டி தற்கொலைப் பாதையில் தள்ளுவதற்கும் தேவையானது. இன்று அழிவு வருகிறது என்று கூறி சிறுவர்களையும் யுவதிகளையும் யுத்தத்தில் இறங்குமாறும் அழைக்கின்றனர். முடியுமான வரையில் எல்லோரையும் ஒரு விதத்தில் சிறிலங்கா இராணுவத்தின் முன்தள்ளி விடுவதே இவர்களின் தந்திரோபாயமாகும்.

இந்த யுத்தத்தை தடுக்க எமக்கு வேறு வழிகள் இருக்கவில்லையா? கிழக்கு மாகாண மக்கள் பற்றி கரிசனையாக கதைப்பவர்கள் அவர்களின் பிரத்தியேகமான பிரச்சனைகளை கணக்கில் எடுத்து செயற்படுவார்களாயின்

1. இவ்வளவு மூர்க்கமாக இந்த யுத்தத்தை ஆரம்பித்திருப்பார்களா?
2. சரணடைந்த பொலிசாரை சுட்டுக் கொன்று இராணுவத்தினதும் காடைகளினதும் சீற்றத்தை சாதாரண மக்களின் மீது கட்டவிழ்த்து இருப்பார்களா?
3. அன்று மற்றைய இயக்கங்களை அழிக்க முயன்ற போது அதனை எதிர்த்த கிழக்கு மாகாணத் தலைமைகளை ஒதுக்கி வடபகுதியில் இருந்து அழிப்பை நடத்த ஆட்களை அனுப்பியிருப்பார்களா?
4. மற்றைய இயக்க அழிப்பின் போது வடபகுதியில் கொல்லப்பட்ட இளைஞர்கள் அப்பாவி கிழக்கு மாகாண இளைஞர்களே
5. ஏன் வடபகுதியில் யுத்தத்தை ஆரம்பிக்கவில்லை?
6. ஸ்துாலமான பிரச்சனைகளைக் கொண்ட முஸ்லிம் சமுகத்தின் பிரச்சனை மிகவும் கவனமாகவும் அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்தும் கையாளப்பட வேண்டியதொன்று. இவர்களது இறுமாப்புடனான செயல்முறை மேலும் சிக்கலை வளர்த்துள்ளது.

இவர்களின் தொடர்ச்சியான இந்தியப்படை மீதான யுத்தமாயினும் சரி, மிக மூர்க்கத்தனமான முறையில் மக்கள் நலனில் சிறிதும் அக்கறையில்லாத தமது வரட்சியடைந்த சிந்தனைத் தளத்தில் இருந்து தொடக்கி வைத்ததாகும்.

தமிழ் மக்களை அழிவுப் பாதையில் இட்டுச் செல்லும் இவர்கள் இன்று அரசின் இனப்படுகொலை பற்றி கதைப்பவர்கள் அன்று தலைநகரில் பல கொலைகளைச் செய்யும் போது இவர்களுக்கு பாதுகாப்பு கொடுத்தது இவ்வரசாங்கமே.

ஐம்பதாயிரத்துக்கும் கூடுதலான சிங்கள மக்களை இலங்கை இராணுவம் மூர்க்கத்தனமாக படு கொலை செய்தபோது இவர்கள் மௌனமாக இருந்தது மட்டும் அன்றி சர்வதேச அரங்குகளில் அரசிற்கு சாதகமாக இவர்கள் நிலைப்பாடு எடுத்தார்கள். அரச படையின் உதவியுடன் தேசிய இராணுவத்தை அழித்தவர்கள் பலவந்தமாக ஆட்சேர்ப்பில் இணைந்த பல இளைஞர்களை சரணடைந்த பின்னரும் கொன்று குவித்தார்கள்.

தமக்கிடையேயான பதவிப் போட்டியாலும் தொடர்ச்சியாக தாம் செய்து வந்த கொலைகள், ஈழம் என்று கூறி உணர்ச்சியூட்டி, சயனைட் அருந்தி சாகடித்த நுாற்றுக்கணக்கான இளைஞர்களின் அர்ப்பணங்கள் அனைத்தும் இவர்களை அழிவுக்கே இட்டுச் செல்லும். தமது அழிவின் ஒவ்வோர் கட்டத்திலும் தமது இருப்பைப் பாதுகாக்க மட்டும் சமாதானம், பேச்சுவார்த்தை என முன்வந்தாலும் மக்களுக்கு நிரந்தர சமாதானத்தையோ, பாதுகாப்பையோ இவர்களால் ஒரு போதும் பெற்றுக் கொடுக்க முடியாது.

எனவே தாம் அழிய முன்னர் மக்களையும் அழிப்போம் என்னும் பாணியில் இவர்களின் செயற்பாடு இருக்கும். மக்கள் இன்று சிறிலங்கா அரசின் இனப்படுகொலைக்கும் புலிகளின் இனத்தற்கொலைக்கும் எதிராக நிலைப் பாடுகள் எடுக்க வேண்டியவர்கள் ஆகின்றனர். உண்மையில் இவர்கள் கூறுவது போல் இவர்களது போராட்டம் புனிதமானது, ஈழம் கிடைக்கும் என்று நம்புவோர் ஓரத்தில் நின்று கைதட்டாமல் இவர்களுடன் இணையுங்கள். வரலாறு தெரிந்தவர்கள், சிந்திக்க கூடியவர்கள் ஓவியங்களிலும் சிலைகளிலும் துப்பாக்கி வைத்து வணங்கும் இவர்களது அரசியல் வங்குரோத்தை இனம் கண்டு கொள்பவர்கள் உண்மையில் எமது எதிர்கால சந்ததியின் நன்மைக்காக குரல் கொடுங்கள்.

அப்பாவிச் சிறுவர்களையும் யுவதிகளையும் அழிவுப் பாதையில் இருந்து மீட்டெடுங்கள். வரலாறு உங்களுக்கு நன்றி கூறும். மதத் தலைவர்கள், சமுகப் பிரமுகர்கள் ஆகிய நீங்கள் உங்கள் கணிப்பை முன் வையுங்கள்.

பொய்மையும் அதர்மமும் ஆணவமும் கொண்ட வாழ்வில் இருந்து விடுபடுவோம். அதிலிருந்த வரும் ஆரோக்கியமான அரசியல் ஊடாக சிறிலங்கா அரசின் கயமைகளை எதிர்கொள்வோம். உலக மனச்சாட்சியை எம் பக்கம் திருப்புவோம். ஆக்கபூர்வமான அரசியலை மேற்கொண்டு அநியாயமாக "தியாகம்" என்னும் மாயையில் எம் மக்களின் இரத்தக்கறை படிந்த வரலாற்றில் இளைஞர்களும் யுவதிகளும் இணைவதை தடுப்போம்.

பொதுமக்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்